# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 மே மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 25.05.2018–ந் தேதி மாலை 3.30 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் : 1**

இந்நகர் மன்ற தீர்மான எண் 367 நாள் 30.04.2018–ன் படி கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 1–வது வார்டு புதிய பேருந்து நிலையம் பின்புறம் அமைந்துள்ள (மாட்டுக்கொட்டகை) கழிவுநீர் பம்பிங ஸ்டேசனில் உள்ள 10HP மின்மோட்டார் காயில் மற்றும் ஸ்டார்டர் பேனல்போர்டுகள் பழுதுகளை சரி செய்து கொடுப்பதற்கு பொருள்கிரயம் மற்றும் வேலைக்கூலி உட்பட பணி செய்து கொடுப்பதற்க்கு 14.05.2018–ந் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.சி.பழனி<br>CPA என்ஜினியரிங காண்ட்ராக்டர்,<br>2/70–7 புது பஸ் ஸ்டாண்ட் அருகில்<br>கீழக்கரை. | ரூ.28,500/– |
| 2 | திரு. ஆர். உத்தண்டி,<br>என்ஜினியரிங காண்ட்ராக்டர்,<br>1/556-A நேரு நகர், 9வது தெரு<br>கலக்ட்ரேட்(போஸ்ட்) , இராமநாதபுரம். | ரூ.29,300/– |
| 3 | திரு.பி.சிவக்குமார்,<br>இன்ஜினியரிங காண்ட்ராக்டர்<br>21/52 மெயின்ரோடு, கீழக்கரை | ரூ.30,100/– |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ 28,500/–க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.பழனி CPA என்ஜினியரிங காண்ட்ராக்டர், கீழக்கரை. விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.379** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

இந்நகராட்சியில் 2017–18–ம் ஆண்டு நடைபெற்ற திட்டப்பணிகள் மற்றும் இதரப்பணிகளில் ஒப்பந்ததாரர்கள். சப்ளைதாரர், இதர நிறுவனஙகள் மற்றும் இந்நகராட்சி பணியாளர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி பிடித்தஙகளை அரசு தலைப்பில் செலுத்தப்பட்டதற்கு கீழ்காணும் விபரப்படியான பணிகள் செய்து கொடுத்த வகைக்கு கட்டணம் ரூ 24050/– மட்டும் வழஙகஙகோரி M/S ஆலயம் அசோஸியேட்ஸ் எண்.117 ஜெய் துர்கா காம்ளக்ஸ் சத்திரம் பஸ்நிலையம் திருச்சி–2 நிறுவனத்திடமிருந்து 24/05/2018–ந் தேதிய பட்டியல் பெறப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 1 | E-TDS Return Filing 26Q Non salary for Contractors Data Processing & Uploading Fees | Rs.7200/- |
| 2 | Traces certificate Downloading Charges | Rs.9600/- |
| 3 | TDS Return for Salary 24Q4 Data Processing Fee | Rs.7250/- |

மேற்கண்ட விபரப்படியான ரூ 24050/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.
**(கோப்பு எண். 741/இ1/2017)**

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ 24050/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண்.380** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 3**

கீழக்கரை நகராட்சியில் மொத்தம் 21 வார்டுகளுக்கும் நகராட்சியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியில் 13692 எண்ணம் வீட்டு வரிவிதிப்பு உள்ளது. ஆனால் வீட்டு குடிநீர் இணைப்பு 808 மட்டுமே உள்ளது. கடந்த மாதம் நடந்த நகராட்சிகளின் ஆணையர் அவர்கள் சென்னை, அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கியுள்ளார். மேலும் அதற்க்குண்டான பிரேரனை சமர்ப்பிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டதின் படி கீழக்கரை நகராட்சியில் மீதமுள்ள 1000 எண்ணம் குடிநீர் இணைப்பு வழங்க ஆகும். உத்தேச செலவீனம் ரூ.75.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து 2018-19 ஆம் ஆண்டு இடைவெளி நிரப்பு நிதி (Infra Gap filling)-ன்கீழ் முழு மானியமாக ஒதுக்கீடு செய்து, நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்காணும் திட்டத்திற்கான செலவீனம் ரூ.75.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து 2018-19 ஆம் ஆண்டு இடைவெளி நிரப்பு நிதி (Infra Gap filling)-ன்கீழ் முழு மானியமாக ஒதுக்கீடு செய்து, நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்
**தீர்மானம் எண்.381** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 4**

அரசாணை (நிலை) எண்.40 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை நாள்.19.04.2018-ன்படி மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து தரம் உயர்த்தப்பட்ட இரண்டாம் நிலை நகராட்சிகளின் பணியாளர்கள் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினங்கள் 49 சதவீதத்திற்குள் இருக்கும் நகராட்சிகளுக்கு அத்தியாவசியமான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது. மேலும், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு சம்பந்தப்பட்ட நகராட்சியின் பொதுநிதியிலிருந்து பணியாளர்களின் செலவினங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இந்நகராட்சிக்கு கீழ்க்காணும் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டது.

| வ.எண் | பதவி | தற்போதைய ஊதியம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மேலாளர் (வகுப்பு IV) | குறைந்தபட்ச ஊதியம் ரூ.35,400/– (நிலை–11, ரூ.35,400/– 1,12,400/–) | 1 |
| 2. | நகராட்சி பொறியாளர் (வகுப்பு III) | குறைந்தபட்ச ஊதியம் ரூ.36,400/– (நிலை–16, ரூ.36,400/– 1,15,700/–) | 1 |
| 3. | பணி ஆய்வர் | குறைந்தபட்ச ஊதியம் ரூ.18,200/– (நிலை–5, ரூ.18,200/– 57,900/–) | 1 |
| 4. | வருவாய் ஆய்வர் (வகுப்பு V) | குறைந்தபட்ச ஊதியம் ரூ.20,600/– (நிலை–10, ரூ.20,600/– 65,500/–) | 1 |
| 5. | நகரமைப்பு ஆய்வர் | குறைந்தபட்ச ஊதியம் ரூ.35,400/– (நிலை–11, ரூ.35,400/– 1,12,400/–) | 1 |

மேற்காணும் விபரப்படி இந்நகராட்சிக்கு புதிதாக தோற்றுவித்த பணியிடஙகளின் அரசாணையின் நகல் உரிய நடவடிக்கைக்காக, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 35190/2010/எச்1, நாள்.03.05.2018ன்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண் சி1/527/2018)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.382</u>** அனுமதிக்கப்பட்டது மற்றும் பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

இந்நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் ஆடு அடிக்கும் தொட்டி உணவு பாதுகாப்பு மற்றும் தரஙகள் சட்டம் 2006–ன் கீழ் தமிழ்நாடு உணவுப்பாதுகாப்பு மற்றும் மருத்துவ நிர்வாகத்துறை (உணவு பாதுகாப்பு பிரிவு) மூலம் வழஙகப்பட்டுள்ள உரிமம் எண்.12417017000156 நாள்.20.07.2017–ன் படி உள்ளதை 2018–2019–ம் ஆண்டு புதுப்பிப்பதற்குரிய கட்டணம் ரூ.2000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உரிய தலைப்பில் செலுத்துவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். எச்1/1417/2016)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

உணவு பாதுகாப்பு மற்றும் தரஙகளின் அவசியத்தை கருதி 2018–2019–ம் ஆண்டு உரிமம் புதுப்பிப்பதற்குரிய கட்டணம் ரூ.2,000/– யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.383</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 6</u>**

இந்நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006–ன் கீழ் தமிழ்நாடு உணவுப்பாதுகாப்பு மற்றும் மருத்துவ நிர்வாகத்துறை (உணவு பாதுகாப்பு பிரிவு) மூலம் வழஙகப்பட்டுள்ள உரிமம் எண்.12417017000153 நாள்.20.07.2017–ன் படி உள்ளதை 2018–2019–ம் ஆண்டு புதுப்பிப்பதற்குரிய கட்டணம் ரூ.2000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து உரிய தலைப்பில் செலுத்துவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண் இ1/548/2015)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

உணவு பாதுகாப்பு மற்றும் தரஙகளின் அவசியத்தை கருதி 2018–2019–ம் ஆண்டு உரிமம் புதுப்பிப்பதற்குரிய கட்டணம் ரூ.2,000/– யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.384</u>** அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர் மற்றும்**
**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**